# மனித உரிமைகள் மீட்பு

மாதமிருமுறை இதழ்

உரிமை - 8 மீட்பு - 07 ஜூலை 1 - 15 | 2023 விலை 20/-



குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் பேச்சு

## மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்புகிறது....


UMMANI
TEA DUST
SELECTED QUALITY
HYGIENIC PACKING
UMMANI
TEA DUST
CTC TEA DUST
100g
50g - ₹.22
100g - ₹.36
250g - ₹.70
500g - ₹.140
1kg - ₹.280
தமிழகம் முழுவதும்
மாவட்ட வாரியாக
முன் பணம் இல்லாமல்
டீலர்கள் தேவை!
தங்கள் தொடர்புக்கு:
9952119066

# மனித உரிமைகள் மீட்பு

## (மாத இருமுறை இதழ்)

வெளியீட்டாளர்: M. அப்துல்ரகுமான்

உரிமை-8 மீட்பு-07 ஜூலை 1-15 | 2023



**ஆசிரியர்:** நீலகிரி K. மதுசூதனன்.
**இணை ஆசிரியர்:** புதுவை K. ராஜாராம்குமார்.
**தொகுப்பு ஆசிரியர்:** வேலூர் M. ராமச்சந்திரன்.
**சிறப்பு உதவி ஆசிரியர்:** தேனி AR. நாசர்கான்.
**சிறப்பு துணை ஆசிரியர்:** நாகர்கோயில் Dr. S முகம்மது அலி,
**சிறப்பு செய்தி ஆசிரியர்:** வாணியம்பாடி G. வெங்கடேசன்.
**பொறுப்பு ஆசிரியர்:** பெரம்பலூர் M. இளவரசன்.
**தலைமை செய்தி ஆசிரியர்:** நாகர்கோயில் C.J. சுதர்மன்.
**கௌரவ ஆசிரியர்:** கிருஷ்ணகிரி Dr. குமரவேல்.
**தலைமை ஆசிரியர்கள்:** Dr. முகம்மது காசிம், Dr. K. கலைச்செல்வன்.
**முதன்மை ஆசிரியர்கள்:** பரமகுடி S. பதர்னிஷாபேகம், R.M நந்தினி, T. அரவிந்தன், Dr. P. முருகேசன், கேரளா P.K. பிரதிஷ், SGM. ரமேஷ்.

**நிர்வாக ஆசிரியர்கள்:**
Dr M. ஹரிகிருஷ்ணன், M. காதர் முகைதீன்.

**கௌரவ இணை ஆசிரியர்கள்:** R. அகிலேஷ், A. கேம்ராஜ் N. அன்பழகன், A. பிரபாகரன், S.A. சையதுமுகைதீன் ஆலிம், S. லோக சுந்தரம், A.விஜி, R. ரத்தீஷ், C.சதிஷ்.

**கௌரவ செய்தி ஆசிரியர்கள்:**
S. ஆல்பர்ட் பிரான்சிஸ் சேவியர், R. சந்திரபோஸ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:** S. ரமேஷ், R. சாம் எட்வர்ட்.

**செய்தி ஆசிரியர்கள்:**
R. M. பரமகுடி ராமச்சந்திரன், புதுவை S செல்வமணி.

**கௌரவ இணை ஆசிரியர்:** A.R. பத்மநாதன், RNS. வெங்கடேஷ்வரா

**முதன்மை துணை ஆசிரியர்கள்:** M. தனராஜ், M. லோகேஷ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:**
D. கென்னடி, L.S. மனோகரன், S. தினேஷ்ராஜ், S. முத்து இப்ராகிம் ஷா, M. ஜெய்பிரசாத்.

**தலைமை இணை ஆசிரியர்கள்:**
G. திருச்செந்தில்வேல், T. செந்தில்குமார், ST ஜோசப், K. சதீசன்.

**தலைமை கௌரவ ஆசிரியர்கள்:**
M. கார்த்திக், A. ஷபீக் ரகுமான்.

**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**
M. விஜயகுமார், S.B. ரவிக்குமார்.

**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**
C. பெருமாள், J. கோவிந்தராஜ், C. அய்யாவு, R. தாகிர், K. ரவிச்சந்திரன்.

**துணை ஆசிரியர்கள்:**
D.சுரேஷ்குமார், G.சுரேஷ், A. மன்சூர், தனுஷ் பாண்டியன், J தாஹிர்.

**கௌரவ துணை ஆசிரியர்கள்:**
P. சதீஷ், G. அருள்செல்வன், D. கோபிநாத், P. உதயகுமார், A.T. அஷ்ரப், S. ரவிக்குமார்.

**உதவி ஆசிரியர் குழு:**
K. நமச்சிவாயம், S. சரவணன், M.S. ஆரோக்கியசாமி, M. விஜயேந்திரன். K. தம்புசாமி, முசா(எ)சாகுல் ஹமீது, Dr. ஸ்டேன்லி மோசஸ், Dr. L. ரமேஷ், A.S. அருண்குமார், A. முஜிபுர் ரகுமான், M. மாலா, M. ஆனந்தராஜ், AMS. ஹம்சத்அலி, R. சுப்பு, D. ராஜீவ்காந்தி, S. முரளிதரன், T. சுதாகர், S. கலாநிதி, G. கலையரசன், M. நாகராஜ், கிஷோர் குமார், ஜெயின் சன்சா, R.மலர்கொடி, RD ராம்குமார், A. ஆரோக்கியசாமி.

**நிருபர்கள்:**
M. தயாநிதி, S. சுல்தான்அலாவுதீன், M.சுரேஷ்குமார், M. செய்யது சகாபுதீன், S. சீனிவாசன், S. கிருஷ்ணன், P. வேல்முருகன், A. பார்த்திபன், S. சுரேஷ், S. சுப்ரமணி, லாசரஸ் கோவல், D. வில்வநாதன், G. ஜாபர் அலி, Dr.A. அருள்சாமி, V. முத்துகுமரேசன், S. சுந்தரமூர்த்தி, C. பிரபாசிங், M.J. சீனிவாசன், B. செல்வமணி, Dr. முஸ்தபா, S. லோகநாதன், A. முகமது தௌபிக், M. ஈஸ்வரி, V. ராஜாமுகமது, I. இப்ராஹிம், S.S. சஹாபுதீன், A. முகமது இதிரீஸ், R. ஜெயாகிருஷ்ணன், K. ரஜமோனி, A. விஜயசிங்கம், G. குமரேசன், M. அஹமத்முஸ்தபா ஆலிம், M. தமிழ்செல்வன், Y. முபாரக், ரியாஸ் அகமது, S. முகமது ஷெரீப், முஜிபூர்ரகுமான், S. சசிகுமார், R. ரவி, A. அமிர்தவேல், Y. மைதின் ஷசா, V. செல்வராஜ், S. சபாபதி, Dr. டார்வின் ஜான், ஜெயசுனிதா, R. சுதாகர், A. செல்வராஜ், C. அய்யாவு, K. சின்னராஜா, N. சுரேஷ், Y. முபாரக் அலி, S. ரியால் அகமது, M. கோவிந்தராசு, முரளி (எ) பிரேம்குமார், S. பாலமுருகன், S. தென்னரசு, Dr. ஜான் டைட்டஸ் இம்மானுவேல், R. பிரஸ்டன்ட், R. டேனியல், சத்திய நாராயணன், இர்பான், W. பீட்டர், கார்த்திகேயன், சரவணன், ஜான் மார்க், கோபாலகிருஷ்ணன், B. புஷ்பலதா, C. பெருமாள், K.A. செல்வராஜ், K. குணசேகரன், M. கலந்தர் முகைதின், S. சுந்தரமூர்த்தி, M. சுரேஷ், P. சிவகாமி, உபகாரம், ஆறுமுகம், A. பாலசுப்பரமணியன், தாமரைகனி, K. மணிகண்டன், M. பாலமுருகன், R. நாகராஜன், வேலுச்சாமி, K.S.சசிகுமார், L. ராஜகணபதி, A. ஜாபீர், M.மனோஜ், S. வெங்கடேஷ்குமார், G.ஜெயபிரகாஷ், S.ரபி, N.ஜெய்கணேஷ், M.ராஜா, M.தயாளன், K. விஜயகுமார், P. கிரேசி எலிசபத்மேரி, A.சக்திவேலு, V.சக்திவேல், D.சிவப்பிரகாசம், R.விவேக்கமல், K.ராஜா, H. ஹாஜா மைதின், R. ஜீவனந்தம், S. ஜான்சன், T. ஜெயசந்திரன், முபாரக் அலி, ராஜா முகமது, ரஸியாபேகம், சுவைஹாபேகம், M. மல்லிகா, முகமது அஜீஸ் K. ராஜ்குமார், V. தசரதன்.

**சட்ட ஆலோசகர்கள்:**
R. சிவக்குமார் BA BL (மதுரை),
R. சீதா BA BL (பட்டுக்கோட்டை), C. பாலாஜி BA BL (திருச்சி),
M. ஞானசேகரன் BA BL (பொன்னமராவதி),
K. கேசவமூர்த்தி BA BL (தஞ்சாவூர்),
R. S. ராஜேந்திரன் BA LLB (வேதாரண்யம்),
C. முருகன் BA BL (நாகப்பட்டினம்),
D.G. தினகரன் BA LLB (கிருஷ்ணகிரி),
S. மோகன் காந்தி BA BL (ஓசூர்).

**புகைப்பட நிருபர்கள்:**
AMS. சல்மான் அஹமது, A. குர்சித் ஆலம் கான், R. ரவி, V. வித்யாவீரப்பன், M. அருண், Dr.R. செல்வராணி. K. ஷக்கீனா சொர்ணலதா, மதிவிழி.



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**
ஆசிரியர்,
**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**
எண்:2/115D1, ஆன்டாஞ்சிரா, கொன்னச்சால் Po,
எருமாடு, பந்தலூர் தாலுக்கா, நீலகிரி மாவட்டம்,
தமிழ்நாடு-643239. செல்: 9543410000
Mail: manithurimaigalmeetpu@gmail.com
http://internationalhumanrightswatch.org


"மனித உரிமைகள் மீட்பு" இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும். https://youtube.com/@manithaurimaigalmeetpu5936 என்ற Youtube மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.

## முக்கிய அறிவிப்பு

**மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சங்கங்கள் இல்லை. மனித உரிமைகள் மீட்பு என்பது இந்திய பத்திரிக்கை துறையில் RNI பதிவு பெற்ற பத்திரிகையாகும். சில நபர்கள் மனித உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்று செயல்பட்டால் பத்திரிக்கை நிர்வாகம் பொறுப்பேற்காது.**

இப்படிக்கு
-ஆசிரியர்



**இந்த கலியுகத்தில் ஒவ்வொரு பெண் குழந்தையும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள கட்டாயம் தற்காப்பு கலையைக் கற்றுக்கொள்ள வேண்டும்.**

# மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்புகிறது....

**ச**மீபகாலமாக நாம் அதிகம் கேள்விப்படும் செய்தி ஒன்று என்னை அதிகமான மன உளைச்சலுக்கு ஆளாக்கிக்கொண்டு வருகிறது. பெண்கள், குழந்தைகள் மீதான பாலியல் வன்முறையும் அதைத் தொடர்ந்து அவர்கள் தற்கொலை செய்து கொள்வதுமான செய்தியைக் கேள்விப்படும் போது உண்மையைச் சொல்லவேண்டுமென்றால் அவமானமாக இருக்கிறது. அறத்தையும் பண்பாட்டையும் அதிகம் பேசும் ஒரு சமூகத்தில் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் முன்னேறிய ஒரு நாட்டில் அறிவியலும், தொழில் நுட்பமும் வளர்ந்த காலக்கட்டத்தில் இப்படிப்பட்ட கேவலமான, அருவருப்பான செயல்களும் நடக்கத்தான் செய்கின்றன என்பது வெட்கித் தலைகுனிய வைக்கிறது.

*இவற்றைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது;இருக்கவும் கூடாது!'விட்றாதீங்கப்பா' என்று அந்தக் குழந்தைகள் கதறுவது என் மனதிற்குள் ஒலிக்கிறது. பள்ளிகளில் கல்லூரிகளில் பணிபுரியும் இடங்களில் பொது வெளிகளில் பெண்களும், குழந்தைகளும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அதில் சில சம்பவங்கள்தான் வெளியில் வருகிறது. மற்றவை அப்படியே மறைக்கப்படுகிறது.*

அரை நூற்றாண்டு காலத்துக்கு முன்னால் தலைவர் கருணாநிதி ஒரு படத்தில், 'மனச்சாட்சி உறங்கும் சமயம் பார்த்துத்தான் மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்புகிறது' என்று எழுதினார். அப்படி மனச்சாட்சியற்ற மனிதர்களால் பெண் பிள்ளைகள் பாலியல் சீண்டல்களுக்கு உள்ளாக்கப்படும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வரை நாம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பற்றிப் பேசுவதில் எந்தப் பொருளும் இல்லை. சக உயிராக பெண்ணைப் பார்க்கும் எண்ணம் தோன்றாத வரை இதனைத் தடுக்க முடியாது.

உடல் ரீதியாக ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாகச் செய்யப்படும் வெளிப்படையான பாலியல் சீண்டல்களுக்கு எதிராக எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்களுக்கு முன்னால் நிறுத்தப்பட்டு இத்தகைய நபர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்று நான் இந்த நேரத்தில் உறுதி அளிக்கிறேன்.

இப்படியான பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படும் பெண்கள், குழந்தைகள் அதைப்பற்றி வெளிப்படையாகப் புகார் தருவதற்கு முன் வர வேண்டும்.

பள்ளியின் ஆசிரியர்களிடம் தலைமை ஆசிரியரிடம் பெற்றோர்களிடம் சக அதிகாரிகளிடம் நிர்வாகத்திடம் புகார்களைத் தர வேண்டும். அந்தப் புகார் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களும் தயங்கக் கூடாது. புகாரை வாங்கினால் பள்ளியின் பெயர் கெட்டுப் போகும் என்று பள்ளி நிர்வாகமும் தனது மகளுக்கு நடந்ததை வெளியில் சொன்னால் ஊரார் தவறாகப் பேசுவார்கள் என்று பெற்றோரும் நினைக்கக் கூடாது. அப்படிச் செய்தால் அது உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்துக்குச் செய்யும் மாபெரும் துரோகமாக ஆகிவிடும். பாலியல் சீண்டலுக்கு உள்ளாக்கப்படும் பெண், உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுகிறார். உடல் வலியோடு உள்ளத்து வலியும் ஏற்படுகிறது. அவமானம் அடைகிறார். ஊக்கம் குறைகிறது, நம்பிக்கை தளர்ந்து போகிறது, சக மனிதர்கள் மீதே வெறுப்பு வளர்கிறது, ஆண்கள் மீதே கோபம் அதிகம் ஆகிறது, கல்வியிலோ வேலையிலோ கவனம் செலுத்த முடியாதவராக ஆகிறார்.

அந்தப் பெண்ணின் அனைத்துச் செயல்பாடுகளுமே இதனால் தடைபடுகிறது. அவரது எதிர்காலமே கேள்விக்குறியாகிறது. இத்தகைய சரிவுகளில் இருந்து பெண் குலத்தை காக்க வேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருக்கிறது. இதை மற்ற அனைத்துப் பிரச்னைகளையும் விட மிக முக்கியமான பிரச்னையாக தமிழ்நாடு அரசு கருதுகிறது.

பாலியல் தொல்லைகள், சீண்டல்கள் குறித்த புகார்கள் வந்ததும் உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நீங்களே கடந்த சில நாட்களாக அதனைச் செய்திகளில் பார்த்துக்கொண்டு வருகிறீர்கள். உண்மைக் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை பெற்றுத் தர இந்த அரசு தயங்காது!



**குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் பேச்சு**

குழந்தைகளுக்கான உதவி எண் 1098 அரசின் நடைமுறையில் உள்ளது. எந்தக் குழந்தையாக இருந்தாலும் தனக்கு ஒரு பாதிப்பு என்றால் 1098 என்ற எண்ணுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும்.

இரகசியம் காத்து, அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

அதேபோல் சென்னை டிபிஐ அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கல்வித் தகவல் மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் உளவியல் பயிற்சி பெற்ற நிபுணர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். பாலியல் வன்முறை தொடர்பாக மாணவர்களிடம் இருந்து பெறப்படும் புகார்களுக்கு, தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

குழந்தைகளின் பாதுகாப்பினை பள்ளிகள் உறுதி செய்ய சுய தணிக்கைப் பட்டியல் பள்ளிக் கல்வித்துறையால் கடைப்பிடிக்கப்படுகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்தடுப்பு பிரிவு தலைமையகத்தில் இணையதளக் குற்றப்பிரிவு (சைபர் கிரைம்) காவல்நிலையம்அமைக்கப்பட்டு காவல் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. அதற்காக நிதியம் ஒன்று செயல்படுகிறது.

போக்சோ சிறப்பு நீதிமன்றங்கள் முறையாகச் செயல்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதும் 16 மாவட்டங்களில் போக்சோ நீதிமன்றங்கள் அமைந்துள்ளது. மேலும், 4 மாவட்டங்களில் நிறுவ ஆணையிடப்பட்டுள்ளது. அனைத்து வழக்குகளையும் விரைந்து முடித்து உண்மைக்



குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தர உத்தரவிட்டுள்ளேன்.

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு முழுமையாக முற்றுப்புள்ளி வைக்க அரசு இலக்கு நிர்ணயித்து உள்ளது. * குழந்தைப் பாதுகாப்பு குறித்து சிறப்பாகசெயல்படுவதற்கு, இந்தியாவிலேயே முதன்முதலாகத், தமிழ்நாடு மாநில குழந்தை பயிற்சி மையம் யுனிசெப்உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

குழந்தைகள் பாதுகாப்பு குறித்த பயிற்சி ஆசிரியர்களுக்கும் காவலர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசால் வெளியிடப்படும் அனைத்துபாடப்புத்தகங்களிலும் குழந்தைகள் பாதுகாப்பிற்கான மாணவர் உதவி எண்.14417 குறித்த விழிப்புணர்வுச் செய்தி வரும் கல்வியாண்டிலிருந்து அச்சிடப்பட்டு வழங்கப்படும்.

சில நாட்களுக்கு முன்னால் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில்,குழந்தைகளுக்கான கொள்கை 2021 என்ற கொள்கைக் குறிப்பேட்டை தலைமைச் செயலகத்தில் நான் வெளியிட்டேன். ஒவ்வொரு குழந்தையையும் அனைத்துவிதமான சுரண்டல்களில் இருந்தும் வன்முறைகளில் இருந்தும் காக்கும் அறிக்கையாக அது அமைந்துள்ளது. குறிப்பாக குழந்தைகளுக்காக பாதுகாப்பு அதில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. அரசு காட்டும் அதே அக்கறையை பள்ளி, கல்லூரி நிர்வாகங்களும் காட்ட வேண்டும். தங்களிடம் பயிலும் பெண் பிள்ளைகளின் பாதுகாப்பை அவர்கள் உறுதி செய்தாக வேண்டும்.

பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளோடு எளிமையாகவும் இனிமையாகவும் பழக வேண்டும். ஒரே வீட்டுக்குள் தனித்தனித் தீவுகளாக வாழ வேண்டாம்.

அன்புக் குழந்தைகளே உங்களை அன்போடும் பாதுகாப்போடும் வளர்க்கும் கடமை எங்களுக்கு இருக்கிறது. ஒரு முதலமைச்சராக மட்டுமில்லாமல் ஒரு தந்தையாகவும் இருந்து உங்களைக் காக்கும் பொறுப்பு எனக்கு இருக்கிறது. தயவு செய்து யாரும் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டாம் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். ஒரு பெண் குழந்தை தற்கொலை செய்து கொள்கிறார் என்றால் அவர் இந்த சமூகம் மொத்தத்தையும் குற்றம் சாட்டிவிட்டு மரணம் அடைகிறார் என்று பொருள். வாழ்ந்துதான் போராட வேண்டும். வாழ்ந்து காட்டுவதன் மூலமாகத்தான் உங்களிடம் அத்துமீறிய நபர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தர முடியும். எனவே யாரும் தற்கொலை செய்து கொள்ள வேண்டாம் என்று ஒரு தந்தையாக உங்கள் சகோதரனாக உங்கள் குடும்பத்தில் ஒருவனாக இருந்து கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் இருக்கிறோம். நான் இருக்கிறேன். அரசாங்கம் இருக்கிறது.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

**கடல் மட்டம் உயர்தல், வெள்ளப்பெருக்கு, கடும் வறட்சி உள்ளிட்ட இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ள தயாராக இருங்கள் : இந்தியாவிற்கு எச்சரிக்கை!!**

டெல்லி : பருவநிலை மாறுதலால் அதிகப்படியாக கடல் மட்டம் உயர்தல், வெள்ளப்பெருக்கு, கடும் வறட்சி உள்ளிட்ட இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ள இந்தியா தயாராக வேண்டும் என்று பருவநிலை ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் வானிலை மாறுதல்கள் குறித்த சர்வதேச கருத்தரங்கு கடந்த 23ம் தேதி தொடங்கி 26ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் ஆய்வறிக்கை தாக்கல் செய்துள்ள பருவநிலை ஆய்வு வல்லுநர் ஸ்வப்னா பனிக்கல், கடல் மட்டம் உயர்வால் ஏற்படும் பிரச்சனைகளை எதிர்கொள்ள இந்தியா தயாராக இருக்க வேண்டிய அவசியம் குறித்து விளக்கியுள்ளார்.

# இந்தியாவிற்கு எச்சரிக்கை!

குறிப்பாகஇந்திய கடலோர மாவட்டங்களில் எச்சரிக்கை அவசியம் என்று அவர் வலியுறுத்தி உள்ளார். 1870ம் ஆண்டில் தொடங்கி 2000ம் ஆண்டு வரை சர்வதேச அளவில் கடல் மட்டம் 1.8 மிமீ உயர்ந்துள்ளதாக கூறியுள்ளார். ஆனால் 1993ல் தொடங்கி 2017ம் ஆண்டு வரை இந்த அளவு 2 மடங்காக 3.3 மிமீ அளவிற்கு கடல் மட்டம் உயர்ந்திருப்பதை ஸ்வப்னா பனிக்கல் சுட்டிக் காட்டியுள்ளார். 2050ம் ஆண்டில் மேலும் 15 20 செமீ அளவுக்கு கடல் மட்டம் உயர்வு இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. வெப்பத்தை 91% கடல் உட்கிரிகிப்பதே உயர்வுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

இதனால் இந்திய கடலோர பகுதிகளில் புவியியல் அமைப்பே மாறும் அபாயம் இருப்பதாகவும் வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். மேலும் கடல் மட்டம் உயர்வால் அதிக புயல்கள் ஏற்படும் காலங்களில் கடலில் எழும்பும் அதிக உயர அலைகளும் கடல் மட்டத்தை மேலும் உயர்த்தும் ஆபத்து உள்ளதாக அவர்கள் எச்சரித்துள்ளனர்.மேலும் மழை காலங்களில் அதி கனமழை கொட்டுவது போன்றே பருவமழை காலங்களில் மழை பொய்த்து கடும் வறட்சி நீடிக்கவும் வாய்ப்பு உள்ளது என்பது அவர்களின் கணிப்பாக உள்ளது. தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடக உள்ளிட்ட தென் இந்திய மாநிலங்களே அதிகம் பாதிக்கக் கூடும் என்று எச்சரித்துள்ள ஆய்வாளர்கள், கடும் சவால்களை எதிர்கொள்ள இம்மாநிலங்கள் தயாராக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளனர்....






# தமிழ் ஏன் கற்க வேண்டும் 5 கட்டாய காரணங்கள்

ஒரு மொழியைக் கற்க பல காரணங்கள் இருக்கலாம். நீங்கள் ஒரு இடத்திற்குச் செல்ல விரும்பலாம், படிக்கலாம் அல்லது அந்த மொழியில் உரையாடலாம் அல்லது உங்கள் ஆர்வங்கள் மற்றும் பொழுதுபோக்கிற்காக அதைக் கற்றுக்கொள்ளலாம். தமிழ் கற்க என்ன காரணங்கள் இருக்க முடியும்? சரி, பல உள்ளன.

ஆன்லைனில் தமிழ் கற்க பல வழிகள் உள்ளன, மேலும் நீங்கள் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்வதை எளிதாக்கும் பல தமிழ் கற்றல் பயன்பாடுகள் சந்தையில் கிடைக்கின்றன. தமிழ் கற்க முதல் ஐந்து காரணங்களை இங்கே தருகிறோம்.

### அதிக எண்ணிக்கையிலான தமிழ் பேசுபவர்கள்

உலகில் 80 மில்லியனுக்கும் அதிகமான தமிழ் மொழி பேசுபவர்கள் உள்ளனர் என்பது

உங்களுக்குத் தெரியுமா? இந்தியா, இலங்கை, மலேசியா, மொரீஷியஸ், சிங்கப்பூர், கனடா மற்றும் உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில் தமிழ் மொழி அதிகம் பேசப்படுகிறது.

சர்வதேச வர்த்தகத்தில் உயரத்தை அடைய விரும்பும் வணிகம் உங்களிடம் இருந்தால், தமிழ் கற்றல் பயன்பாடுகள், இணையதளங்கள் போன்ற பல்வேறு ஆதாரங்களைப் பயன்படுத்தி நீங்கள் தமிழ் கற்க வேண்டும்.

### கிளாசிக் மொழி நிலை

3000 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட பழமையான செம்மொழிகளில் தமிழ் ஒன்றாகும்! பல சர்வதேசப் பல்கலைக்கழகங்கள் தமிழை பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இணைத்துள்ளன. யாராவது வேறு மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு செல்ல திட்டமிட்டால் தமிழ் அறிவு அவர்களை நல்ல நிலையில் வைத்திருக்கும். எனவே, அடிப்படையான தமிழ் மொழியைக் கற்க இது ஒரு காரணமாக நிற்கிறது.




### தமிழ் கலாச்சாரத்தை புரிந்து கொள்ளுதல்

தமிழ்ப் பண்பாடும் தமிழ் மொழியும் பிரிக்க முடியாத வகையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பண்பாட்டைப் புரிந்து கொள்ள, உலகெங்கிலும் உள்ள எந்த மொழிக்கும் கலாச்சாரத்திற்கும் பொருந்தக்கூடிய மொழியைக் கற்க வேண்டும். எந்தவொரு புதிய மொழியையும் கற்றுக்கொள்வது மிகவும் வேடிக்கையானது. இது சவாலாகவும் உள்ளது. தமிழ் கற்க நீங்கள் கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டும், ஆனால் அது மதிப்புக்குரியது.

### வளமான இலக்கியம்

மொழியின் அறிவு, தமிழ் மொழி செழுமையாகவும், வளமாகவும் இருக்கும் இலக்கியம், இசை, நாடகம் போன்ற பரந்த அளவிலான பணிகளுக்கு உங்களைத் திறக்கும். வரலாற்றுப் படைப்புகள் முழுக்க முழுக்க தமிழ் மொழியில் எழுதப்பட்டவை.

நீங்கள் வரலாற்றில் அல்லது இலக்கியத்தில் ஆர்வமுள்ளவராக இருந்தால், அத்தகைய கவர்ச்சிகரமான இலக்கியம் மற்றும் வரலாற்றைத் தவறவிடாமல் இருக்க தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ளுங்கள்.

### வேடிக்கைக்காக!

புதிய மொழியைக் கற்றுக்கொள்வதில் என்ன வேடிக்கை இல்லை? ஆம், நூற்றுக்கணக்கான கடிதங்கள் மனப்பாடம் செய்ய சிறிது நேரம் ஆகலாம், ஆனால் அது முயற்சிக்கு மதிப்புள்ளது. ஒரு மொழியைக் கற்றுக்கொள்வது அறிவாற்றல் செயல்முறைக்கு ஒரு பெரிய சொத்து. ஒரு மொழி பேசுபவரின் மூளையுடன் ஒப்பிடும்போது, இருமொழி பேசுபவரின் மூளை வித்தியாசமாக செயல்படுகிறது. யார் சற்று புத்திசாலியாக இருக்க விரும்ப மாட்டார்கள்? நீங்கள் மனநல வேலையின் சிந்தனையால் வற்புறுத்தப்படக்கூடிய வகை இல்லை என்றால், நீங்கள் புரிந்து கொள்ளக்கூடிய அனைத்து சிறந்த தமிழ் திரைப்படங்கள் மற்றும் பாடல்கள் எப்படி இருக்கும்?



# ‘ஜேம்ஸ் வெப்’ முதல் ஏஐ வரை சமீப ஆண்டுகளில் அறிவியல் - ஒரு பார்வை

**உலகம் நொடிக்கு நொடி மாறிக் கொண்டிருக்கிறது. உலகின் இயக்கு விசைகளில் ஒன்றான அறிவியலும் புதிய மேம்பாடுகளும் ஒவ்வொரு நாளும் வளர்ந்துவருகிறது. ஒரு துறை பயணிக்கும் திசையை வரையறுக்க, குறிப்பிட்ட கால அளவீடு தேவைப்படுகிறது. ஆனால், அறிவியலைப் பொறுத்தவரை ஒரு நாள் என்பதே அதிகபட்ச காலாவதிக் காலம் எனும் அளவில் இன்று அத்துறையில் மேம்பாடுகள் தீவிரமடைந்திருக்கின்றன. கடந்த சில ஆண்டுகளின் அறிவியல் மேம்பாடுகள் பற்றிய சிறு தொகுப்பு இங்கே:**

*அடிப்படை அலகுகளுக்குப் புதிய வரையறை! கிலோகிராம், நொடி, மீட்டர், ஆம்பியர், கெல்வின், மோல், கேண்டெலா ஆகிய அடிப்படை அலகுகளின் வரையறையை ‘அனைத்துலக அலகுகள் முறை’ நிர்ணயிக்கிறது. இந்தியா உள்பட 60 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட அனைத்துலக அளவியல் அமைப்பின் மாநாடு 2018 இல் பாரிஸில் நடைபெற்றது.*

*இதில் கிலோகிராம், கெல்வின், மோல், ஆம்பியர் ஆகிய நான்கு அலகுகளின் வரையறையை மாற்றி அமைப்பதற்கு முன்மொழியப்பட்டது. 130 ஆண்டுகள் பழமையான கிலோகிராம் அலகுக்கு, பிளாங்க் மாறிலியை அடிப்படையாகக் கொண்டு வரையறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 2019 மே 20 அன்று (உலக அளவீட்டியல் தினம்) நடைமுறைக்கு வந்தது.*

*கருந்துளையின் முதல் படம்! நிகழ்வெல்லை தொலைநோக்கி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த சுமார் 200 அறிவியலாளர்களைக் கொண்ட குழு, கருந்துளையின் முதல் ஒளிப்படத்தை 2019 ஏப்ரல் மாதம் வெளியிட்டது; உலகம் முழுக்கப் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்ட வானொலி அதிர்வெண் தொலைநோக்கியின் வலைப்பின்னல்களில் இருந்து பெறப்பட்ட பல்லாயிரம் ஒளிப்படங்களை இணைத்து மெஸ்ஸியர் 87 என்று பெயரிடப்பட்ட கருந்துளையின் ஒட்டுமொத்தப் படத்தை அக்குழுவினர் உருவாக்கினர்.*

*ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கி: 2022ஆம் ஆண்டின் முக்கிய அறிவியல் நிகழ்வுகளில் ஒன்றாக ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி அமைந்தது. அகச்சிவப்புக் கதிர்களை உள்வாங்கும் இந்தத் தொலைநோக்கி, ஹப்பிள் தொலைநோக்கியைவிடத்*

துல்லியமாகவும் நுணுக்கமான தரவுகளுடனும் ஆழ்புலத்தைப் படம்பிடித்திருக்கிறது.

பெருவெடிப்பின்போது உருவான முதல் விண்மீன் கூட்டங்கள், பூமியைப் போன்று உயிர்வாழத் தகுந்த புறக்கோள்கள் பிரபஞ்சத்தில் வேறெங்கும் இருக்கின்றனவா, விண்மீன் கூட்டங்கள் எவ்வாறு ஒன்றோடொன்று இணைகின்றன என்பன போன்ற பல்வேறு அம்சங்களைத் தொடர்ந்து கண்டறிந்துவருகிறது.


மலேரியாவுக்குத் தடுப்பூசி: ஒவ்வோர் ஆண்டும், 90 நாடுகளில், சுமார் 6,27,000 பேர் மலேரியாவுக்குப் பலியாகின்றனர். இந்நிலையில், மலேரியா தடுப்பூசியை உலகச் சுகாதார நிறுவனம் பரிந்துரைந்திருப்பது மலேரியா ஒழிப்பில் முக்கிய முன்நகர்வாகக் கருதப்படுகிறது.

கானா, கென்யா, மலாவி ஆகிய ஆப்பிரிக்க நாடுகளில் முதல் கட்டமாக மலேரியா தடுப்பூசி திட்டம் செயல்பாட்டில் உள்ள நிலையில், 2019ஆம் ஆண்டு தொடங்கிச் சுமார் 15 லட்சம் குழந்தைகளுக்கு முதல் தவணை தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக உலகச் சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு: ஓபன்ஏஐ நிறுவனம், கடந்த செப்டம்பர் 2022இல் அறிமுகப்படுத்திய ‘சாட்ஜிபிடி’ என்னும் செயற்கை நுண்ணறிவு மென்பொருள், அநேகமாக எல்லாத் துறைகளிலும் தாக்கம் செலுத்திவருகிறது. மனிதர்களுக்கு அச்சுறுத்தலாகப் பார்க்கப்பட்டாலும், ஆராய்ச்சிகளில் செயற்கை நுண்ணறிவின் பங்கு அளப்பரியதாக மாறிவருகிறது. செடி, கொடி தொடங்கி அனைத்து உயிரினங்களிலும் ஆயிரக்கணக்கான புரத வகைகள் உள்ளன.

புரதங்களின் வடிவம் என்ன, அவற்றில் உள்ள மூலக்கூறுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்று கண்டறிவது உயிரியலிலும் வேதியியலிலும் முக்கியமாகும். முன்பு ஒரு புரதத்தின் அமைப்பைக் கண்டறிவதற்கே பல ஆண்டுகள் ஆகும். ஆனால், சில மாதங்களிலேயே 20 கோடிக்கும் மேலான புரதங்களின் வடிவமைப்பைக் கணித்துள்ளது செயற்கை நுண்ணறிவு. மேலும், இவ்வாண்டில் ஒளிப்படங்கள், காணொளிகள் உருவாக்கத்திலும் எடிட்டிங் முதற்கொண்டு ஆற்றல், விண்வெளி எனப் பல்வேறு துறைகளிலும் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் நீள்கிறது.

இந்திய அறிவியல் நிகழ்வுகள்: கரோனா நோய்த்தொற்றுக்கான கோவாக்சின் தடுப்பூசி இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டது மட்டுமல்லாமல், லட்சக்கணக்கானோர் அந்தத் தடுப்பூசியை எடுத்துக்கொண்டார்கள். கரோனா தொற்றுக்கு நாசிவழி செலுத்தப்படும் முதல் தடுப்பு மருந்தை இந்தியா 2022இல் அறிமுகப்படுத்தியது. ஊசிவழியே தடுப்பூசி செலுத்துவதற்குத் தேர்ந்த மருத்துவப் பணியாளர்கள் தேவை. ஆனால், நாசிவழி எளிதானது. இம்மருந்து கரோனா தொற்றுக்கானது என்றாலும், எதிர்காலத்தில் பல்வேறு நோய்களுக்குமான தடுப்புமருந்துக் கண்டுபிடிப்புகளில் முக்கிய நகர்வாகவும் இருக்கும்.



விண்வெளி ஆராய்ச்சியைப் பொறுத்தவரை, 61 செயற்கைக்கோள்களுடன் இந்தியா தன்னை வலுவாக நிலைநிறுத்திக் கொண்டுள்ளது; நிலவுக்குச் சந்திரயான் 3, சூரியனுக்கு ஆதித்யா எல்1 என விண்வெளி ஆராய்ச்சியில் புதிய சாத்தியங்களை இந்தியா திறந்துவிட்டுள்ளது. விண்வெளியிலிருந்து மனிதர்கள் புவிக்குத் திரும்பும்போது, அவர்களைத் தாங்கிவரும் பாராசூட்டானது மிதமான வேகத்தில் பயணித்துத் தரையிறங்க வைக்கும் ஆய்வு வெற்றியில் முடிந்தது; விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் இந்தியாவின் ககன்யான் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஒரு முக்கியப் படியாக இது அமைந்தது.



**குழந்தைள் எவ்வாறு இயக்கப்படுகிறார்கள்**

குழந்தைகள் தங்களுக்குள் இருக்கிற உள்ளுணர்வால் முதலில் இயக்கப்படுகிறார்கள். அதை எப்படி பயன்படுத்த வேண்டும் அல்லது கட்டுப்படுத்த வேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. மேலும் இந்த சுயநலத் தூண்டல்களிருந்து வெளிவர நாம் தான் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். நமது அறிவுரைகள் அவனை அதிலிருந்து வெளிக்கொணரும்.

**சிறந்த பெற்றோர்**

பெற்றோர் என்பதற்கு எந்தக் கல்லூரியிலும் பட்டமெல்லாம் கிடையாது. அது நமது சமூக கட்டமைப்பின் தவிர்க்க இயலாத ஒரு கடமை. அப்பறம் எப்படி சிறந்த பெற்றோராக திகழ்வது என்று கேட்பீர்கள்? இதோ சில வழிகள் இருக்கின்றன

# உங்கள் குழந்தை எப்பப் பாத்தாலும் சேட்டை பண்றானா..

## அவனோட ஜாதகம் இங்க இருக்கு படிங்க

**து**றுதுறுவென இருக்கக்கூடிய குழந்தைகளை அடக்கி ஆளுவது என்பது அசாதரண காரியமல்ல. இது ஆரம்பகாலங்களில் ரசிக்கத் தக்கதாக இருந்தாலும் போகப் போக பெரிய பிரச்சினைகளை உண்டாக்கிவிடும்.

24 மணிநேரமும் கண்களில் விளக்கெண்ணெயை ஊற்றிக் கொண்டு அவனை சந்திக்க வேண்டியதாக இருக்கும். அதே சமயத்தில் ஆக்டிவாகவே இல்லாமல் இருப்பது குழந்தைகளின் எதிர்காலத்தை பாதிக்கும். இவர்களின் உளவியலை புரிந்துக் கொள்வது மட்டுமே இதற்கானத் தீர்வாக இருக்கும்.

தெரிந்து கொள்வோம்

உங்கள் குழந்தைக்கு பிடிப்பது என்ன பிடிக்காதது என்ன?

உங்கள் குழந்தையை எந்தச் செயல் சிரிக்க வைக்கும் எந்தச் செயல் அழவைக்கும்

உங்கள் குழந்தையை எது புத்துணர்ச்சியூட்டும் எது துயரத்திற்கு அழைத்துச் செல்லும்

போன்ற அடிப்படைகளைத் தெரிந்து வைப்பவரே சிறந்த பெற்றோராக இருக்க முடியும்.

**குழந்தைகளின் உளவியல்**

குழந்தைகளின் உளவியல் வளர்ச்சிக்கான உளவியலாகப் பார்க்கப்படுகிறது. நடக்க ஆரம்பித்தலிருந்து இளமைப் பருவத்தை அடையும் வரை மொழித்திறன், சமூக மாற்றம் உணர்ச்சியில் வளர்ச்சி ஆகியவற்றைக் கண்காணிப்பது தான் குழந்தைகளுக்கான உளவியலாகும். இந்தத் தருணங்களில் அவனது நிலைப்பாட்டைக் கவனித்து அவனுக்குரிய உரிய பண்பாடுகளை பயிற்றுவிக்க வேண்டும்.

## ஏன் குழந்தைகள் உளவியலை புரிந்துக் கொள்ள வேண்டும்

பணம் சம்பாதிப்பதற்காக ஓடும் பெற்றோர்களால் குழந்தைகளின் உளவியல் மிக மோசமாகப் பாதிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு என்ன பிடிக்கும் பிடிக்காது என்று தெரிந்து கொள்ளும் போது தான் அவர்களுக்குத் தேவையானதை சம்பாரிக்க முடியும்.

## நாசமாகும் குழந்தைகளின் வாழ்வு

குழந்தைகளின் உளவியலை சரியாகப் புரிந்துக் கொள்ளாத பெற்றோர்களால் தான் எண்ணற்ற குழந்தைகளின் எதிர்கால கனவுகள் சுக்கு நூறாகப் போகின்றன. அப்படி என்ன முக்கியமா குழந்தைகளின் உளவியலை புரிந்து கொள்வது? அப்பிடின்னு கேள்வி கேக்குறவங்க அதுக்கான காரணத்தை கீழே படிங்கள்.

## குழந்தைகளை கவனியுங்கள்

குழந்தைகளை கவனிப்பது தான் அவர்களது உளவியலை தெரிந்து கொள்வதற்கான பிரத்யேகமான வழியாகும். ஒவ்வொரு குழந்தைக்கும் தனித் தன்மை உண்டு. அது தான் அவனது வாழ்நாள் முழுமைக்கும் கூட வரபோகிற ஒரு விசயம் எனவே ஒரு போதும் பிற குழந்தைகளோடு ஒப்பிட்டுப் பேசாதீர்கள்.

## குழந்தையை புரிந்து கொள்வதற்கான கேள்விகள்

குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமான செயல்பாடு எது?

ஒரு விசயம் பிடித்தது என்றால் எப்படி வினையாற்றுவான். பிடிக்க வில்லை என்றால் எப்படி வினையாற்றுவான். அது காய்கறி, சீக்கிரமாக தூங்குதல், வீட்டுப்பாடம் செய்தல் இப்படி என்னவாக வேண்டுமானல் இருக்கலாம்.

சமூகத்தோடு அவன் எப்படி ஒத்து வாழ்கிறான். பிறரோடு விசயங்களை பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறானா? புதிய விசயங்களை செய்ய விரும்புகிறானா?

இந்தக் கேள்விகளை உங்களுக்குள் கேட்டுக் கொள்ளுங்கள். அவர்களை மதிப்பிடாதீர்கள் . மாறாக தெரிந்து கொண்டு விழிப்புணர்வுடன் செயல்படுங்கள்.

## குழந்தைகளுடன் நேரத்தை செலவிடுங்கள்

குழந்தைகளோடு நேரமெல்லாம் செலவிடாமல் இருப்போமா என்று நீங்கள் கேட்பது புரிகிறது. உங்கள் அகராதியில் இருக்கிற குழந்தைகளை பள்ளிக்கு கொண்டு போய் விடுவது, பள்ளியிலிருந்து அழைத்து வருவது, சாப்பிடும் போது நாலு வார்த்தைகளை



பற்றி விசாரிப்பது மட்டும் போதுமானதல்ல.

## வேறு எப்படி செலவிடுவது

உங்கள் குழந்தைகளின் உரிமைகளை அவர்களையே பாதுகாப்பாக வைத்திருக்க உதவச் சொல்லிக் கொடுங்கள். அவர்களின் பிடித்தமான தொலைக்காட்சி நிகழ்சிகளைப் பற்றிப் பேசுங்கள். அவனிடம் அதன் கதைகளை உள்வாக்குங்கள். அவரோடு பேசிக் கொண்டே விளையாடுங்கள்.

குழந்தைகளுக்கு மறைக்க தெரியாது மனதில் பட்டதை வெளிப்படையாக சொல்லி விடுவார்கள். இது எந்த அழுக்குகளையும் அவன் மனதில் சுமக்க விடாது.

அவனுக்கான **செலவிப்படும் நேரம்** அவனுக்காக

### மட்டுமே

வண்டி ஓட்டும் போதோ சமைக்கும் போதோ அல்லது இன்னொரு வேலையைச் செய்துக் கொண்டோ அவனைப் பற்றி கேட்பது தவறு. அவனுக்கான தனிப்பட்ட நேரத்தை அவன் எதிர்பார்ப்பான். அப்போது மட்டும் தான் அவன் வாய் திறப்பான். 5 அல்லது 10 நிமிடமோ முழுமையாக அவனுக்கு மட்டும் நேரம் ஒதுக்குங்கள்.

### குழந்தைகளின் சுற்றுப்புறத்தை ஆராயுங்கள்

குழந்தைகள் அவர்களைச் சுற்றி என்ன நடக்கிறதோ அதைப் பொறுத்து தான் அவரது செயல்பாடுகளும் அமைகின்றன. அவனிடம் பேசுவோர் எத்தகைய கருத்தை திணிக்கிறார்களோ அது தான் அவன் மனதில் ஆழமாகப் பதிகிறது. ஒருவன் அதிகமாக சேட்டை செய்கிறான் அல்லது சமூகத்தில் இருந்து விலகி இருக்கிறான் என்றால் சுற்றுப்புறமே காரணம். அதைக் கண்டறிந்தாலே இந்தப் பிரச்சினைகளை தவிடு பொடியாக்கி விடலாம்.

### குழந்தையின் மூளையின் செயல்பாடுகளை கவனியுங்கள்

குழந்தையின் உளவியலை புரிந்துக் கொள்ளும் பெற்றோர்கள் கூட இதில் கோட்டை விடுகிறார்கள். அதனால் தான் இன்றைய கால குழந்தைகளுக்கு தற்கொலை என்பது சாதரணமான விசயமாக மாறிவிட்டது. பிரச்சினைகளுக்கான தீர்வு, எதிர்கொள்ளல் போன்றவற்றை சரியாக செய்கிறானா என்பதை ஆராயுங்கள்.

### அவர்களது கதைகளை கூற வாய்ப்பளியுங்கள்

இன்பமோ துன்பமோ யாரிடமாவது சொல்ல வேண்டும் என்பது அனைவருக்கும் பொதுவானது. எனவே குழந்தைகளின் அனுபவங்களை பகிர அனுமதியளியுங்கள்.

### கவனிக்க வேண்டியது.

வார்த்தைகளை சொல்லும் போது எந்தத் தொணியில் பேசுகிறான் என்பதை கவனிக்க வேண்டும்.

பேசும் போது அவனது முகப்பாவனைகளை உற்று நோக்குங்கள். அங்கு அவன் எதற்கு பயப்படுகிறான். எதை விரும்புகிறான் என்கிற ஜாதகம் கிடைத்துவிடும்.

அவனது உடல் மொழியை கவனியுங்கள். அவன் கண் எதைக் கவனிக்கிறது. கை கால் அசைவுகள் எதை உணர்த்துகிறது. போன்ற எல்லாவற்றையும் கவனியுங்கள்.

உணர்வுகளை பல வழிகளில் வெளிப்படுத்துவார்கள்

குழந்தைகள் தங்களது உணர்வுகளை பல வழிகளில் வெளிப்படுத்துவார்கள். அது ஓவியமாக இருக்கலாம். அல்லது இசையாக இருக்கலாம் அந்த திறனை வளர்க்க உந்துதலாக இருங்கள். ஆரம்பத்தில் குறுகிய வட்டத்தில் அணுகாதீர்கள். அவனுடைய விருப்பத்தை அவனே தேர்வு செய்ய வாய்ப்பளியுங்கள்

### அனுமானிக்க வேண்டாம்

உங்கள் குழந்தைகள் சந்தோசமாக இருக்கிறார்கள் என்று அனுமானிக்க வேண்டாம். அந்த நினைப்பு அப்பறம் சந்தோஷ் சுப்பரமனியம் படத்தில் ஜெயம் ரவி பிரகாஷ் ராஜிடம் பேசும் வசனம் போன்ற அனுபவத்தை உங்களுக்கு அளித்துவிடும்.

### மற்ற குழந்தைகள பாருங்கள்

இது ஏதும் பலன் அளிக்கவில்லை என்றால் உங்கள் குழந்தை மீது தவறில்லை. நீங்கள் அணுகிய விதத்தில் தவறு இருக்கலாம். எனவே ஒத்த வயதில் இருக்கிற மற்ற குழந்தைகளையும் கண்காணியுங்கள். நீங்கள் செய்த தவறு புரிவதற்கான வாய்ப்பாக கூட அது மாறலாம். ஆனால் அதை அப்படியே உங்கள் குழந்தையிடம் பதிவிடாதீர்கள்.

Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: K.MADHUSUDHANAN

# 91 வயதில் மறைந்த கல்வி கடல் திரு பிஜி



75 வருட கல்வி கடல் அனுபவமும் சமூக அக்கறையுடன் சேவை செய்த திரு. பி.ஜி. கோவிந்தராஜ் அவர்களின் மரணம் லட்சியம் குழுவினரை மிகுந்த சோகத்தில் ஆழ்த்தியது... அவரது பணிகள் பற்றி ஒரு வார்த்தையில் சொல்ல முடியாது. பாரதீய ஜனசங் முதல் முறையாக தமிழகத்தில் தோன்றிய போது அவர் செயலாளராக பொறுப்பில் இருந்தார். ஆர். எஸ். எஸ். அமைப்பின் பிரச்சாரக் ஆக 3 ஆண்டுகள் சேலத்தில் சேவை புரிந்தார். விவேகானந்த கற்சிலை கன்யாகுமரியில் அமைத்த போது அந்த கமிட்டியின் நிறுவனர் மற்றும் உறுப்பினராகவும் இருந்தார். விவேகானந்த கல்வி குழுமத்தின் நிறுவனராகவும், செயலாளராகவும் பல ஆண்டுகள் பணியாற்றி பல பள்ளிகள் உருவாக காரணமாகவும் இருந்தவர் இவரே.. காஞ்சி மடத்தின் சேவா ரத்னா விருதை 1999 ஆம் ஆண்டு பெற்றவர். தமிழகத்தின் வித்யா பாரதி நிறுவிய தலைவர். விவேகானந்த எடுகேஷனல் அகாடமி நிறுவியவர். இந்தியா பிஸ்டன்ஸ் நிறுவனத்தின் பொது மேலாளர் பதவி வகித்தவர். தமிழகத்தில் ஒரு நூறு பள்ளிகள் உருவாக காரணமானவர். 75 ஆண்டு சமூக சேவை எனது வாழ்க்கையின் உத்வேகம் மற்றும் ஆதரவு புரிந்தார் அவர்.



கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் அவருடன் இணைந்து பல கல்வி மற்றும் சமூக சேவை மட்டுமல்லாமல் ஆர். எஸ். எஸ் இல் இணைந்து ஸ்வயம் சேவைக்காக பிரச்சாரக்காகவும் இருந்து மறைந்த திரு வேதகிரி அவர்களுடனும் பணி செய்ததை நினைத்து மிக்கதும் பெருமை அடைகிறேன். 1992 ஆண்டு விகாஸ் விழிப்புணர்வு இயக்கம் என்கின்ற அறக்கட்டளை துவங்கி அவருடன் இணைந்து விகாஸ் வித்யாஷ்ரமம் தொடங்கிய திரு கேசவன் அவர்களுடன் இணைந்து பல சேவைகளை முனைவர் மு. ரஜினி அவர்கள் பெரம்பூர், சேத்துப்பட்டு மற்றும் பெரியார் நகரில் உள்ள ஏழை எளிய மக்களின் நலனுக்காக இலவச பள்ளிகளை நடத்தி நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு கல்வி உதவிகள் பல செய்து இலவச வகுப்புகள் நடத்திவந்தோம். இந்த எனது சேவையை பாராட்டி அவரது திரு கரங்களால், 1994 ஆம் ஆண்டு சிறந்த சமூக சேவைக்கான சேவா ரத்னா விருது ரூபாய் இந்து நூறும் வழங்கப்பட்டது. இந்த தொகையில் ஒரு கிராம் கம்மல் வாங்கியதும் அதுவே முதல் முறையாக எனது வருமானத்தில் என்பதும் குறிப்பிட தக்கது. அதுவே எனது சமூக சேவைக்கான முதல் விருது எனது வாழ்க்கையின் ஒவ்வொரு தருணங்களிலும் அன்னாரது வாழ்த்துக்களும் ஆசிகளும் பெற்று கல்வி துறையில் பல சாதனைகளை நடத்தி வந்தேன். மேலும் நமது லட்சியம் தொடங்க அவரது ஆசிகள் மட்டுமே கரணம். அவர் கூறிய வார்த்தைகள் இன்னும் எனது நினைவில் இருக்கிறது. வேலம்மாள் பள்ளியிலிருந்து லக்ஷ்யம் தொடங்க போறேன் என்றதுமே, அவர் கூட்டைவிட்டு வெளியே வந்தாச்சு.. இன்னும் என்ன உயர பறக்க வேண்டியது தான் என்றும் எனது ஆசிர்வாதம் எப்போதுமே உள்ளது என்றார். இப்படிப்பட்ட ஒரு ஆத்மாவின் நல் ஆசீர்வாதங்கள் எப்போதும் எங்களுக்கு உண்டு என்பதையும் அவர் எங்களுடனே எப்போதும் பயணித்து உறுதுணையாக இருப்பர் என்கின்ற நம்பிகையில் கண்ணீருடன் அவரது கரங்களால் பெற்ற விருதுகளுடன் மேலும் உயர விழையும். ...

MANITHA URIMAIGAL MEETPU Tamil Fortnightly, November 1-15-2018
Regd. with the Registrar of News Papers for India under No. TNTAM / 2017 / 74330 / R.Dis.481 / 17

# இன்னுமா நம்பவில்லை...

நீ என்னை கோயிலுக்கு
அழைத்த போது
எனக்கும் சேர்த்து தான்"
நீ வேண்டிக்கொள்ளப் போகிறாய்

"நான் எப்போதுமே
உனக்காக மட்டும் தான்
எனக்காக என்றால்,
நீ வந்து வேண்டிக் கொள்
என்று சொல்லிக்கொண்டு
என்னை கோவிலுக்கு
அழைத்துச் சென்றாய்
அப்போது நீ அர்ச்சனை
செய்யும் போது சாமி சிலைக்கு
உயிர் வந்து விட்டு போகிறது
என்று பூசாரி சொன்னது
இன்னுமா நீ நம்பவில்லை?

பிறகு அம்மனுக்கு
உன் அழகு மீது பொறாமை
அதனால் தான்
அதனை வணங்கும் போது
பதிலுக்கு அது
வணங்குவது இல்லை என்று
பூசாரி சொன்னதை
இன்னுமா தீ தம்பவில்லை?

நீ தினமும் கோயிலுக்கு
சென்று பிள்ளையாரை
வணங்கி விட்டுதான்
வேளைக்கு செல்கிறாய் என்றாய்..
அப்பொழுது சாமிக்கு
உன் மீது வருத்தம்
ஒரு நாள் கூட
நீ வேலைக்கு செல்லும் போது
சாமியை அழைத்து
செல்லவில்லை என்று
சாமியே வருத்தப்பட்டதாக
பூசாரி சொன்னதை இன்னுமா
நீ தம்பவில்லை?

தான் உன்னை பற்றி
எழுதிய கவிதை புத்தகத்தை
கோவிலுக்கு சென்று அர்ச்சனை
செய்யும் போது இவ்வளவு
அழகான தேவதையைப்
பற்றி இவ்வளவு
சுமாரான கவிதைகளில்
உன்னால் எழுத முடிந்தது
என்று சாமி அருள்வாக்கு
சொன்னதாக பூசாரி சொன்னதை
நீ நம்பவில்லையா?

எப்போதும் நீ இருக்கும்
இடத்தில் காற்று
வேகமாக அடித்தபடி
இன்னுமா தீ நம்பவில்லை?
உன் ஆடையோடு
விளையாடுவதை பார்த்து
தான் சந்தேகம் அடைந்து
அழைத்துச் சென்று
காற்று உன்னை
களவாடுகிறதோ என்று

நினைத்து கோவிலுக்கு
பூசாரி வைத்து யாகம்
செய்தது இன்னுமா நீ நம்பவில்லை?

என்னால் தினமும்
கவிதை தான் எழுத முடியும்
உன்னை மாதிரி
கவிதையாக
இருக்கமுடியவில்லையே
இன்று எத்தனை
தடவை அழுதீர்கள் தெரியுமா

கோவிலுக்கு சென்று
பூசாரி பார்த்து
நான் அழுகின்ற போது
இன்னுமா நீ நம்பவில்லை?

கண்கள் கூசாமல்
சூரியனை பார்ப்பதற்கு கூட
முக கண்ணாடி உதவுகிறது
ஆனால் உன்னை கண்களால்
கூசாமல் பார்க்க
எதுவுமே உதவுவதில்லை
என்று நான் கோவிலுக்கு
சென்று பூசாரியிடம் சென்று.
அழுகின்ற போது...
இன்னுமா நீ நம்பவில்லை?
நான் உன்னை காதலிக்கிறேன் என்று

நீ ஜவுளிக்கடைக்கு சென்று
ஒரேயொரு புடவை
வாங்கிக்கொண்டு
பேசாமல் வந்துவிட்டாய்
பிறகு அனைத்து புடவைகளும்
கோவிலுக்கு வந்து
பூசாரியிடம் கூடி அழுவதைப்
பார்த்தும் இன்னுமா நீ நம்பவில்லை?



- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000